# உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்
# International Association of Tamil Research (IATR)

(Incorporated as a non-profit under Companies Act in India, CIN: U85500TN2024NPL167145)

**President**
Mr. Arasar Arullallar (USA)

**Vice-Presidents**
Prof. Dr. P. Marudanayagam
Dr. Francis S Muthu (USA)
Mr. S. Maniam (Singapore)

**General Secretaries**
Mr. D. Gnanasekaran
Dr. A. Sanmugadas (Sri Lanka)
Mr. Ravi V Bala (USA)

**Treasurers**
Dr. K. Elango
Dr. Naga Ganesan (USA)

**Coordinator**
Dr. V. Murugan

**Advisory Council**
Dr. M. Ponnavaikko
Dr. E. Sundaramoorthy
Dr. Sirpi Balasubramaniam
Dr. Maraimalai Ilakuvanar
Dr. D. Gnanasundaram
Dr. Erode Thamizhanban
Dr. C. Subramaniam
Dr. K. Rajan
Dr. Pitchappan Ramasamy
Dr. SM Ramasamy
Dr. M. Senthilkumar
Er. Saravanakumar Manian (USA)
Dr. Sri Skandarajah (UK)
Dr. A. Murugaiyan (France)

**Team Coordinators**
**IATR National Units**
Dr. A. Sanmugadas (Sri Lanka)
Er. Saravanakumar Manian (USA)
**Indian Tamil Sangams**
Mr. S. Kumanarasan, Mumbai
**Professors and Academics**
Prof. Dr. M. Michael Faraday
**Tamil Civilization and Culture**
Dr. S. Rajavelu
**Poets and Writers**
Dr. *Meignani* Prabhakarababu
**Social Media Communications**
Dr. Mu Elangovan
**Siddha Medicine Research**
Dr. P. Selvashanmugam
**Student Community**
Dr. Thamizh Iyalan Dhanasekaran

**Technology Office**
Ms. J. S. Kaninagai
**Auditor**
Dr. R. Balachandran ACA

மார்ச்சு 17,, 2025

**மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர்**
**திரு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்**,

போற்றுதலுக்குரிய அய்யா, வணக்கம்.

**பொருள்: தமிழ் மொழியை உலகெங்கும் கொண்டாடும் வகையில் "உலகத் தமிழ் மொழி நாள்" (World Tamil Language Day) அறிவிக்கை வேண்டுகோள் தொடர்பாக...**

இந்தியாவின் இன்றையச் சூழலில் தமிழ் மொழியின் செழுமையும் அதன் பங்களிப்பும் உலக அளவில் அதிகம் பேசப் பட வேண்டும். காலந்தோறும் தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் தமிழ் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும். தமிழ் மொழியின் தொன்மை, இலக்கண மரபு, தொல் தமிழர் சிந்தனை, பாரம்பரியம், பண்பாடு, இலக்கியம், அறிவியல் பார்வை, பொதுமை நோக்கு என அனைத்துப் பங்களிப்பையும் உலகறியச் செய்வதற்கு ஒரு சிறந்த வழியாக "உலகத் தமிழ் மொழி நாள்" என்ற ஒன்றை அறிவிக்க வேண்டும்.

தற்போது ஏப்ரல் 23, வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்தநாள் ஆங்கிலமொழி நாளாக கொண்டாடப்படுகிறது. இலங்கையில் வாழும் தமிழர்கள் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 27 ஆம் நாளை "தமிழ் மொழி நாள்" எனக் கொண்டாடி வருகின்றனர். அவ்வழியே, பல்வேறு உலக நாடுகளில் இயங்கும் பல தமிழ் அமைப்புகளும் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை, கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து "உலகத் தமிழ் மொழி நாள்" என்று கொண்டாடி வருகின்றனர்.

எனவே உலகத் தமிழர்களின் பாதுகாவலனாகவும் தமிழ் மொழியின் பாதுகாவலனாகவும் தற்போது அமைந்திருக்கும் இந்த திராவிட மாடல் அரசு, ஏப்ரல் 29, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பிறந்த நாளை "உலகத் தமிழ் மொழி நாள்" என்றும் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 29 வரையான ஏழு நாட்களை உலகத் தமிழ் மொழி வாரம் எனவும் அறிவிப்பை வெளியிட்டு இந்த ஆண்டு முதலே தமிழர்கள் கொண்டாட வகை செய்ய வேண்டும் என மிகத் தாழ்மையுடனும் உரிமையுடனும் வேண்டுகின்றோம்.

தங்கள் உண்மையுள்ள,
**உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்திற்காக ..**

**அரசர் அருளாளர்**
**தலைவர்**

**பேரா. முனைவர் ப. மருதநாயகம்**
**துணைத் தலைவர்**
+91 94427 87727

**த. ஞானசேகரன்**
**பொதுச் செயலாளர்**
+91 97173 11113

Address: 3B, 3rd Block, Bajaj Apts, 7/4 Nandanam Extension, Nandanam, Chennai 600035, India.
www.iatrofficial.org

**நகல் படிகள்:-**

மாண்புமிகு திரு உதயநிதி ஸ்டாலின் அவர்கள்
துணை முதலமைச்சர், தமிழ் நாடு அரசு

மாண்புமிகு திரு மு.பெ. சாமிநாதன் அவர்கள்
தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர், தமிழ் நாடு அரசு

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்கள்
நிதி மற்றும் தொல்லியல் துறை அமைச்சர், தமிழ் நாடு அரசு

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள்
மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தமிழ் நாடு அரசு

மாண்புமிகு முனைவர் கோவி செழியன் அவர்கள்
உயர்கல்வித் துறை அமைச்சர், தமிழ் நாடு அரசு

தலைமைச் செயலாளர், அவர்கள்
தலைமைச் செயலகம், தமிழ் நாடு அரசு, சென்னை.

பி. கு : இத்துடன் விரிவான வேண்டுகோளை இணைத்துள்ளோம் .

### “உலகத் தமிழ் மொழி நாள்” (World Tamil Language Day) தேவையின் விரிவு அறிக்கை

வணக்கம்!

மொழியின்றி அமையாது உலகு என்ற அளவில் சற்றொப்ப ஏழாயிரத்திற்கும் அதிகமான மொழிகளால் நிறைந்துள்ளது இவ்வுலகம். எனினும் மொழிகள் என்பது உணர்ச்சி வடிவம், கருத்து வடிவம், ஒலி வடிவம், வரிவடிவம் அல்லது எழுத்து வடிவம் என்ற கூறுகளைக் கொண்டிருந்தால் மட்டுமே முழு வடிவம் பெறும். அந்தத் தகுதி நிலையில் இறுதியாகக் கூறப்பட்டுள்ள எழுத்து வடிவம் என்பது இன்றளவும் பெரும்பாலான மொழிகளுக்கு இல்லை. அவ்வகையில் முழு வடிவம் பெற்ற மொழிகள் நூற்றுக்கும் குறைவான வைகளே.

வட இந்தியர்கள் பலர் தங்களின் தொன்மை மொழியாகக் கொண்டாடும் சமசுகிருதம் கூட தனக்கென்று ஒரு வரிவடிவ முறையின்றி காலந்தோறும் பிராகிருதம், கிரந்தம், பிராமி, தேவநாகரி என மாறி வருகின்ற ஒன்றாகும். தற்போது பயன் படுத்தப் பெறும் தேவநாகரி முறை எழுத்து 8 ஆம் நூற்றாண்டு முதல் பயன்படுத்தப் பட்டு வருகிறது.

இந்தச் சூழலிலும், ஒவ்வொரு ஆண்டும் இந்து நாள்காட்டியின்படி ஷ்ராவணா மாதம் (ஆகசுடு) முழுநிலவு நாளன்று உலக சமற்கிருத நாள் (World Sanskrit Day) கடைபிடிக்கப்பட்டு, பெரும் பொருள் செலவில் ஒன்றிய அரசின் ஆதரவுடன் கொண்டாடி வருகின்றனர். சமற்கிருத மொழியை அழிவில் இருந்து காக்கத் தேவையான நடவடிக்கைகள் குறித்த கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக இந்திய ஒன்றிய அரசு பல ஆயிரம் கோடிகள் செலவழித்து வருவது தாங்கள் அறிந்த ஒன்றே.

ஆனால், உலகின் முதன் மொழியாகவும், பல்வேறு கிளை மொழிகளுக்குத் தாயாகவும் விளங்குகின்ற நம் தாய்த் தமிழ் மொழி, இந்தியாவின் செம்மொழி என்று முதன் முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால் ஒன்றிய அரசால் அறிவிக்கப் பட்ட நிலையில், தமிழ் மொழியின் இலக்கணம், இலக்கியம், செம்மை, நாகரிகம், பண்பாடு, பொதுமைப் பண்பு ஆகியவற்றைச் சீர் குலைக்கும் வகையிலும் தமிழ்ச் சிந்தனை மரபை ஒழித்து வட மரபைப் புகுத்தும் வகையிலும் பல தொடர் முயற்சிகள் நடைபெற்றுவருவது தாங்கள் அறியாத ஒன்றல்ல.

மேலும் 1952 ஆம் ஆண்டு கிழக்கு பாகிசுத்தான் என்றழைக்கப் பட்ட வங்காள தேசத்தில் உருது மொழி திணிப்பை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த ஐந்து மாணவர்களின் ஈகத்தை நினைவு கூறும் வகையில், வங்காள தேசம் என்ற இறையாண்மை மிக்க அந்த நாட்டின் வேண்டுகோளை ஏற்று ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரித் திங்கள் 21 ஆம் நாள் “உலகத் தாய்மொழி நாள்” என ஒரு பொது விழா கொண்டாடப் பட்டு வருகிறது. ஆனால் மொழிக் காப்புப் போராட்டத்தில் உலகிலேயே தமிழர்களுக்கு ஈடாக எந்த இனமும் உயிர்ப்பலி கொடுக்கவில்லை. தமிழ் மொழிக் காப்புப் போராட்டம் இந்திய விடுதலைக்கு முன்பாக 1936 ஆம் ஆண்டுக்கு முன்பாகவே தொடங்கி இன்று

வரை நீறு பூத்த நெருப்பாக தன்னெழுச்சியைத் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழரின் இறையாண்மை என்பது இந்திய நாட்டின் ஒரு மாநிலம் என்ற அளவில் சுருக்கப்பட்டதன் விளைவாக, தாய் மொழிக்காகப் பல நூறு உயிர்களைத் தியாகம் செய்த நிலையிலும் நாம் “**உலகத் தாய் மொழி நாள்**” என்ற குறியீட்டைப் பெற இயலவில்லை.

"தமிழ், உலக மொழிகளில் மூத்ததும், மிகத்தொன்மையான காலத்திலேயே செம்மையான மொழியாக வடிவம் பெற்றது; திராவிடத்திற்குத் தாயாகவும், ஆரியத்திற்கு மூலமாகவும் விளங்கிய மொழி; கிரேக்கம், இலத்தீன், சமற்கிருதம் உள்ளிட்டவற்றுக்குத் தமிழ் மொழி தன் சொற்கள் பலவற்றை அளித்ததுள்ளது என்பதை தக்க சான்றுகளுடன் ஆய்வுவழி திராவிட மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நிறுவியுள்ளார்.

எனினும் “**உலகத் தமிழ் மொழி நாள்**” என ஒரு நாள் இது காறும் மாநில அரசு, இந்திய அரசு அல்லது பன்னாட்டு மன்றத்தால் அறிவிக்கப் படவில்லை என்பது தமிழ் மக்களின் பெரும் மனக் குறையாக உள்ளது.

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் 14-ஆம் நாளன்று, இந்திய அரசமைப்பு நிருணய மன்றத்தில் இந்தியாவின் அலுவல் மொழியாக இந்தியை ஏற்க முடிவு செய்யப்பட்டது. இந்த நாளை நினைவுக்கூறும் வகையில், ஆண்டுதோறும் செப்டம்பர் 14-ஆம் நாள் இந்திமொழி நாளாகவும், செப்டம்பர் 14 முதல் 21 இந்திமொழி வாரமாகவும் இந்திய அரசு சார்பில் கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த நாளில் ஒன்றிய அரசு அலுவலகங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் விழாக்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் என பல்வழிச் செயல்கள் நடத்தப்பெற்று, இந்திமொழியை ஆழமாக்கவும், அகலமாக்கவும், இந்தி மொழியினை விரிவாக்கவும் கருத்துகள் பரிமாறப்படுகிமன்றன; செயலாக்கம் பெறுகின்றன. இந்தி பேசாத மாநில மக்களிடையே இது ஒரு மறைமுகமான இந்தித் திணிப்பு என்பது வெள்ளிடை மலையாகும்.

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் அலுவல் மொழிகளான அரேபிக், சைனீஸ், ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளை கொண்டாடுவதற்காக சிறப்பு நாள்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அரேபிக் நாள் டிசம்பர 18-ஆம் நாளன்றும், சைனீஸ் நாள் ஏப்ரல் 20-ஆம் நாளன்றும், ஆங்கிலம் ஏப்ரல் 23-ஆம் நாளன்றும், பிரெஞ்சு மார்ச் 20-ஆம் நாளன்றும், ரஷ்யன் ஜூன் 6-ஆம் நாளன்றும், ஸ்பானிஷ் ஏப்ரல் 23-ஆம் நாளன்றும் கொண்டாடப்படுகின்றன. இம்மொழி நாட்களை ஐக்கிய நாடுகள் மன்றமே அறிவித்து, கடந்த 2010-ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது.

இந்திய அளவில் தமிழ் உள்ளிட்ட இந்திய நாட்டின் பிற தேசிய இன மொழிகளை அழித்தொழிக்கும் கூர்மையான வாளாக சமற்கிருதம் மற்றும் இந்தி மொழி பயன்படுத்தப்படுகிறது. இந்திய ஒருமைப்பாடு என்ற போர்வையில் ஒற்றை மொழியில் அரசியல் முன்னெடுப்புகள் நடந்த வண்ணம் உள்ளன. இந்த மொழி அரசியலை, மொழி ஆதிக்கத்தை, பிறமொழித் திணிப்பை,

பண்பாட்டு வல்லாண்மைகளைத் தமிழர்கள் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டியக் காலச்சூழலில் தமிழ் மக்கள் உள்ளனர்.

இந்தியாவின் இன்றையச் சூழலில் தமிழ் மொழியின் செழுமையும் அதன் பங்களிப்பும் உலக அளவில் அதிகம் பேசப் பட வேண்டும். காலந்தோறும் தமிழர்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் தமிழ் ஒலித்துக்கொண்டே இருக்க வேண்டும். தமிழ் மொழியின் தொன்மை, இலக்கண மரபு, தொல் தமிழர் சிந்தனை, பாரம்பரியம், பண்பாடு, இலக்கியம், அறிவியல் பார்வை, பொதுமை நோக்கு என அனைத்துப் பங்களிப்பையும் உலகறியச் செய்வதற்கு ஒரு சிறந்த வழியாக "**உலகத் தமிழ் மொழி நாள்**" என்ற ஒன்றை அறிவிக்க வேண்டும். உலகத் தமிழ் மொழி நாள் (World Tamil Language Day) தமிழர்களின் மொழி ஆர்வத்தைக் கொண்டாடும் சிறப்பு நாளாக அமைவதுடன், உலகில் உள்ள அனைத்து தமிழ்ச் சங்கங்கள், பிற அமைப்புகள் தத்தம் வாழும் பகுதிகளில் தமிழ் மொழியின் தொன்மை, சிறப்பு, நன்மைகள் குறித்துப் பேசுவதற்கு ஏதுவாக அமையும்.

உலக அளவில் தனக்கு வாய்த்த தாய்மொழி மீது பற்றுக்கொண்டு தேன் தமிழ், தீந்தமிழ், நறுந்தேன் என்று 80-க்கும் மேற்பட்ட அடைமொழிகளைத் தாய்மொழியாம் தமிழுக்கு அளித்து, மொழியின் உயிர்ப்பை பாதுகாக்கவும் தமிழர் இன உணர்வை முதன்மை நோக்கமாகவும் கொண்டு பாடிய ஒரே கவிஞர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களாவார்.

திராவிட இயக்கக் கோட்பாடுகள், தமிழ்மொழியின் சிறப்புகள் குறித்து புரட்சிக் கவிஞர் பாவேந்தர் அவர்களைப் போல இதுவரை எவரும் பாடியதில்லை, தமிழ்மொழியின் மேன்மைகளை மட்டுமல்ல, அவற்றின் சிறப்பை தொடர்ந்து பாதுகாக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்பதை அடுக்கடுக்காய் திட்டங்களை வகுத்துத் தந்தவர் நமது பாவேந்தர். எனவே, அவரது பிறந்தநாளாம் ஏப்.29-ஆம் நாளை "**உலகத் தமிழ் மொழி நாள்**" (World Tamil Language Day) **அல்லது பன்னாட்டு தமிழ் மொழி நாள்** (International Tamil Language Day) என அறிவிப்பது பொருத்தமாக அமையும் என்று கருதுகிறோம். இந்தக் கருத்தை உலக நாடுகளில் இயங்கும் பல்வேறு தமிழ் அமைப்புகள் ஏற்று கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டாடி வருகின்றனர். எனவே "**உலகத் தமிழ் மொழி நாள்**" (World Tamil Language Day) **அல்லது பன்னாட்டு தமிழ் மொழி நாள்** (International Tamil Language Day) என்ற பொது அறிவிப்பை தமிழ் நாடு அரசு வெளியிட வேண்டும் என உலகத் தமிழ் அமைப்புகளின் சார்பாக உலகத் தமிழாராய்ச்சி மன்றம் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறது. அன்றைய நாளில் பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் கொண்டாடி, தமிழ் மொழிக்காப்பு உறுதிமொழியை எடுக்கவும் பெருமைகளைப் பேசவும் இந்த அறிவிப்பு வழி வகுக்கும்.

ஆங்கிலமொழி இலக்கியத்தின் முகமாகவும், முகவரியாகவும் விளங்கும் வில்லியம் ஷேக்ஸ்பியரின் பிறந்தநாளும், மறைந்த நாளும் ஏப்ரல் 23-ஆம் நாளாக இருப்பதால், அந்நாள் ஆங்கிலமொழி நாளாக கொண்டாடி வருகின்றனர். இலங்கையில் வாழும் தமிழர்கள் ஈழத்து

மண்ணில் தோன்றிய முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 27 ஆம் நாளை "தமிழ் மொழி நாள்" எனக் கொண்டாடி வருகின்றனர்.

எனவே உலகத் தமிழர்களின் பாதுகாவலனாகவும் தமிழ் மொழியின் பாதுகாவலனாகவும் விளங்கும் தற்போது அமைந்திருக்கும் இந்த திராவிட மாடல் அரசு, ஏப்ரல் 29, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பிறந்த நாளை "**உலகத் தமிழ் மொழி நாள்**" என்றும் ஏப்ரல் 22 முதல் ஏப்ரல் 29 வரையான ஏழு நாட்களை **உலகத் தமிழ் மொழி வாரம்** எனவும் அறிவிப்பை வெளியிட்டு இந்த ஆண்டு முதலே தமிழர்கள் கொண்டாட வகை செய்ய வேண்டும் என மிகத் தாழ்மையடனும் உரிமையுடனும் வேண்டுகின்றோம்.

இந்த ஆண்டு முதல் மேற்கண்ட அறிவிப்பு நடைமுறைக்கு வருமானால் தமிழுக்கும் தமிழர்களுக்கும் பெருமை சேர்க்கும். இந்தி மொழி ஆதிக்கத்தை உடைத்தெரிய உலக அளவில் தமிழர்கள் ஒருங்கிணைந்து செயல் பட ஏதுவாகும். எனவே திராவிட மாடல் அரசிடமிருந்து வரும் இந்த அறிவிப்புக்காக உலகத் தமிழர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

நன்றி,!